மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 2 /2025**

**வா.சா. 1**

2025–ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், 29 ஆம் நாள், வாதி தரப்பு (வ.சா.1) சாட்சியின் வாக்கு மூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ன் படி திரு.மூ.ராமநாதன்,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வத்திராயிருப்பு அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| Name | பாண்டியராஜன் | Caste | |
| Father / Husband's Name | கிருஷ்ணமூர்த்தி | Calling | |
| Village | | Religion | |

தேதி 29.10.2025

<u>முதல் விசாரணை</u>

நான் இன்று இந்நீதிமன்றத்தில் எனது சாட்சிய முதல் விசாரணையாக சத்தியபிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள சத்தியபிரமாண நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவை தான் அதனை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன் பிராதில் கோரியுள்ளவாறு தீர்பாகும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ஆவணங்கள்

| | |
|---|---|
| 1 | அசல் வழக்கு எண் 142/2024 என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாதிகளின் ஆதார் அட்டை (எண்ணம் 2) சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** |
| 2 | அசல் வழக்கு எண் 142/2024 என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 05.09.1974 ம் தேதிய வாதிகள் தகப்பனார் கிருஷ்ணமூர்த்தி மற்றும் 1, 2 பிரதிவாதிகளின் பெற்றோர்களான சங்கரன் மற்றும் பெருமா பெயரில் வத்திராயிருப்பு சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 1581/ 1974 ஆக பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 2** |

| | |
|---|---|
| 3 | அசல் வழக்கு எண் 142/2024 என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 16.03.2009 ம் தேதிய வாதிகளின் தகப்பனாரை கார்டியன் ஸ்தானத்தில் வைத்து வாதிகளின் பெயரில் வத்திராயிருப்பு சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.439/2009 ஆக பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 |
| 4 | அசல் வழக்கு எண் 142/2024 என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாதிகளின் பெயரில் வருவாய்த்துறையில் கொடுக்கப்பட்ட பிரிவு 10(1) ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 |
| 5 | அசல் வழக்கு எண் 142/2024 என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 25.07.2024 ம் தேதிய பிராது தபசில் சொத்துக்களுக்கானக 1950 முதல் 1974 ம் ஆண்டு வரையிலான வில்லங்கச் சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 |
| 6 | அசல் வழக்கு எண் 142/2024 என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 25.07.2024 ம் தேதிய வாதிகளின் தகப்பனாரை கார்டியன் ஸ்தானத்தில் வைத்து வாதிகளுக்கு பிராது தபசில் சொத்துக்களை கிரையம் பதிவு செய்து கொடுத்த பதிவைக் காட்டும் 1975 முதல் 24.07.2024 ம் தேதி வரையிலான வில்லங்கச் சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 |
| 7 | 06.11.2024 ம் தேதிய இ சேவை மையத்தில் எடுக்கப்பட்ட தபசில் சொத்துக்களுக்கான வில்லங்கச் சான்றிதழ் இணையதள நகல் வா.சா.ஆ.7 |
| 8 | 09.12.2024 ம் தேதிய வத்திராயிருப்பு சார்பதிவாளர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட 02.02.2005 ம் தேதிய ஆவண எண். 97/2005 ஆக பதிவு செய்யப்பட்ட தான ஏற்பாடு ஆவணம் சார்பதிவக நகல் வா.சா.ஆ.8 |

**குறுக்கு விசாரணை**

**(வழக்கறிஞர்கள் இன்று ஒரு நாள் மட்டும் நீதிமன்ற புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதால் குறுக்கு விசாரணை நீதியின் பால் கருத்தில் கொண்டு ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு